


தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தேனி வடக்கு ஒன்றிய பகுதிகளில் கழக அரசு செய்த திட்டங்களைச் சொல்லி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், தேனி வடக்கு ஒன்றியச் செயலாளர் சக்கரவர்த்தி. முன்னாள் எம்.பி. ரவீந்திரநாத் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

### தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| ” | மாலை 4.00 மணி | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| ” | மாலை 5.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு மேற்கு |
| 10.4.2026 | மாலை 4.00 மணி | விருதுநகர் வடக்கு | திருச்சுழி |
| ” | மாலை 5.00 மணி | விருதுநகர் தெற்கு | அருப்புக்கோட்டை |
| ” | மாலை 6.00 மணி | விருதுநகர் வடக்கு | விருதுநகர் |
| ” | மாலை 7.00 மணி | விருதுநகர் வடக்கு | சிவகாசி |
| 11.04.2026 | காலை 11.00 மணி | தென்காசி வடக்கு | வாசுதேவநல்லூர் |
| ” | மாலை 6.00 மணி | தென்காசி தெற்கு | கடையநல்லூர் |
| ” | மாலை 7.00 மணி | ” | தென்காசி |
| ” | மாலை 8.00 மணி | திருநெல்வேலி மேற்கு | ஆலங்குளம் |
| 13.04.2026 | காலை 11.00 மணி | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி |
| ” | மாலை 4.00 மணி | திருநெல்வேலி கிழக்கு | நாங்குநேரி |
| ” | மாலை 5.00 மணி | ” | இராதாபுரம் |
| ” | மாலை 6.30 மணி | கன்னியாகுமரி கிழக்கு | கன்னியாகுமரி |
| ” | மாலை 7.30 மணி | ” | குளச்சல் |
| ” | மாலை 8.30 மணி | கன்னியாகுமரி மேற்கு | கிள்ளியூர் |
| 14.04.2026 | காலை முதல் மாலை வரை | தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் | |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள் : 08.04.2026.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

# விராலிமலை சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## கே.கே.செல்லப்பாண்டியன்- – ஜோதிமணி எம்.பி. சிறப்புரை!

புதுக்கோட்டை, ஏப். 9 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஒன்றியங்கள் சார்பில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இலுப்பூரில் கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் பி.டி. அரசக்குமார் தலைமையில் நடைபெற்றது. அன்னவாசல் கிழக்கு ஒன்றியச் செயலாளர் தென்னலூர் எம். பழனியப்பன் அனைவரையும் வரவேற்றார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் , விராலிமலை தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே.கே.செல்லப்பாண்டியன் , கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி வாக்குகள் கேட்டு சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்வில் கழக விவசாய அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், , பெட்ர்ட் அந்தோணிராஜ் (காங்), முகம்மது அஸ்ரப் அலி (முஸ்லிம் லீக்), புவனேஸ்வரி (விசிக), சண்முகம் (கம்யூனிஸ்ட்), கார்த்திகேயன் (தே.மு.தி.க.), தர்மராஜ் (தமிழ் தேசம்). கழக ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, கோவிந்தராஜன், மு.பி.ம. சத்தியசீலன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், பேரூர் கழக செயலாளர்கள் வை. விஜயக்குமார், முகம்மது ரிஷா, பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில் குமார், முன்னாள் நகர்மன்றத் தலைவர் ராஜசேகரன், வழக்கறிஞர் திருநான சம்பந்தம், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், டாக்டர் கே.என்.அமானுல்லா, மஜீத் முபாரக், பிரபா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, ராயல் சபா, டி. செல்வம், வழக்கறிஞர் எம்.பாலமுருகன், சாங்கிராப்பட்டி ரவி,

மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். முடியில் விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ் நன்றி கூறினார்.



மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மதுரை மாநகராட்சி 31வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். பிரச்சாரத்தின் போது கழக நிர்வாகிகள் அறிவுநிதி, சரவணன் அம்பலம், முத்துமோகன், ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், பி.டி.மணிமாறன், ரவீந்திரன், தமிழ் சந்திரன், ராம் பிரசாத், நேசனல் சங்கர், சத்யராஜ், ராஜேஸ் என்ற பாக்யராஜ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணிக் கட்சியினர் உடன் இருந்தனர்.



மதுரை கிழக்கு தொகுதீ கழக வேட்பாளர், வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆனையூர் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் தெரு தெருவாகச் சென்று பொது மக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், மருதுபாண்டியன், சசிகுமார், வீரராகவன், கலை கார்த்திகேயன், உமாசிங்கத்தேவன், ரோகிணி பொம்மதேவன், செல்வகணபதி, பாபு, நந்தினி, கொடிவைரவன், பிரபானந்தன், முருகேசன், கவிதா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

### ரூ.5432 கோடியில் அமராவதி ஆறு, காவிரி ஆறு இணையும் இடத்தில் செல்லும் உபரி நீர்

# திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஏரி குளங்களில் நிரப்பப்படும்!

## ஒட்டன்சத்திரம் தொகுதி பிரச்சாரத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி உறுதி!

ஒட்டன்சத்திரம், ஏப்.9-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கரியாம்பட்டி, கூத்தம்பூண்டி, அப்பிபாளையம், பூசாரி பட்டி, பாலப்பன் பட்டி, வடபருத்தியூர், அப்பனூத்து, அப்பிபாளையம், புங்கமுத்தூர், மேட்டுப்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் தீவிர வாக்கு சேகரிப்பின்போது,



கடந்த ஐந்தாண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளான மக்களின் பயன்பாட்டிற்காகக் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாயக் கூடங்கள், குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையங்கள், அறிவுத்திறனை வளர்க்கும் நூலகங்கள், கிராமங்களை இணைக்கும் இணைப்புச் சாலை வசதிகள், பாதுகாப்பான பயணத்திற்குப் பேவர் பிளாக் நடைபாதைகள், விவசாயம் மற்றும் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய அமைக்கப்பட்ட கிணறுகள் மற்றும் அனைத்து வீடுகளுக்கும் வழங்கப்பட்ட பாதுகாப்பான குடிநீர் இணைப்புகள் போன்ற எண்ணற்ற உள் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை எடுத்துரைத்தும்,

ரூ.5432 கோடியில் அமராவதி ஆறு காவிரி ஆறு இணையும் இடத்தில் செல்லும் உபரி நீர் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஏரி குளங்கள் நிரப்பும், திட்டம் செயல்படுத்தப்படும், கல்லூரி மாணவர்களின் உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கும் விதமாக 35 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும் எனவும்,

பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடனுதவி ரூ.5 இலட்சம் வரை உயர்த்தி வழங்கப்படும் எனவும் உறுதியளித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

### தென்காசி சட்டமன்றத் தொகுதி

# வேட்பாளர் கலை கதிரவன் தீவிர வாக்குச் சேகரிப்பு!

## வே.ஜெயபாலன் – முன்னணியினர் பங்கேற்பு!

தென்காசி, ஏப்.9-

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவன் 06.04.2026 அன்று தென்காசி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் வைஷ்ணவி பாலிடம், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி பழனி நாடார் எம்.எல்.ஏ. முன்னாள் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனர் மூர்த்தி பாண்டியன், ம.ம.க. மாவட்ட தலைவர் நயினார் ஆகியோர் முன்னிலையில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கல் செய்து விட்டு வெளியே வந்ததும் செய்தியாளர்களிடம் அவர் கூறியது10 ஆண்டுகளுக்குப் பிறகு தி.மு.க. (உதய சூரியன் சின்னம்) போட்டியிடுவதால் பொதுமக்கள் வாக்களிப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர் என கூறினார்.

அதனைத் தொடர்ந்து கழக வெற்றி வேட்பாளர் டாக்டர். கலை கதிரவன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தென்காசி தொகுதியில் மக்களுக்கு அடிப்படை தேவையான சுகாதாரம், நகர்ப்புற கட்டமைப்பு, கிராமப்புற மேம்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். கல்வியை பொறுத்தவரை வேளாண் கல்லூரி, சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, நர்சிங் கல்லூரி ஆகியவை கொண்டு வரப்படும். விவசாயிகள் நலன் கருதி இரட்டைக்குளம் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படும்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தை திறப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளப்படும். தென்காசி நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற தேவையான வழி வகைகள் மேற்கொள்ளப்படும். மாவட்ட தலைநகரமான தென்காசியின் வளர்ச்சியில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.10 ஆண்டுகளுக்கு பிறகு தென்காசியில் தி.மு.க. போட்டியிடுவதால் உதயசூரியன் சின்னத்தில் பொதுமக்கள் வாக்களிப்பதற்கு மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். கூட்டணிக் கட்சியினரும் மிகவும் உற்சாகம் உள்ளனர். கூட்டணிக் கட்சியாக மட்டுமல்லாமல் கூட்டுக்குடும்பாகவே இருக்கிறோம். அவர்களது அன்பும் ஆதரவும் நன்றாக உள்ளது.

தமிழகத்தில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் செய்த சாதனைகள், தென்காசி தொகுதியில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றியை தேடி தரும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. குறிப்பாக மகளிர்க்கு முதல்வர் அவர்கள் தந்த திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா பேருந்து பயணம், காலை உணவு திட்டம் உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் மூலம் மக்கள் அன்றாடம் பயன்பெற்று வருகின்றனர். எனவே அதிகமான வாக்கு வித்தியாசத்தில் தென்காசி தொகுதியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்று கூறினார்.

அப்போது தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி மாவட்ட முன்னாள் செயலாளர் பொ. சிவபத்மநாதன், பொதுக்குழு உறுப்பினர் சாமித்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.



மதுரை மத்திய தொகுதி கழக வேட்பாளர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று பொது மக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார், உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.